Date: July 31, 2026

To,

National Stock Exchange of India Limited
Exchange Plaza, C-1, Block G
Bandra Kurla Complex
Bandra (E), Mumbai – 400 051

BSE Limited
Phiroze Jeejeebhoy Towers
Dalal Street, Mumbai – 400 001

SYMBOL: HYUNDAI

SCRIP CODE: 544274

Dear Sir/Ma'am

Sub: Newspaper Publication - Information regarding 30th Annual General Meeting

Please find enclosed clippings of newspaper advertisements for information regarding 30th Annual General Meeting, Dividend and Record Date, published today i.e. July 31, 2026 in the following newspapers:

- Dinamalar (Tamil Edition)
- Financial Express (English Edition)

This disclosure will also be hosted on Company's website *viz*. https://www.hyundai.com/in/en/investor-relations/investor-information/disclosure/newspaperadvertisement.

Kindly take the same on record.

Thanking you,
For **Hyundai Motor India Limited**

Pradeep Chugh
Digitally signed by Pradeep Chugh
DN: cn=Pradeep Chugh, email=276223@hmil.net, c=IN
Date: 2026.07.31 15:13:16 +05'30'

Pradeep Chugh
Company Secretary &
Compliance Officer

Encl: As above

'லிப்ட்' பழுதாகி ஏற்படும் விபத்துக்கு யார் பொறுப்பு?

உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

புதுடில்லி, ஜூலை 31–
'லிப்ட்' எனப்படும், மின்தூக்கி தொடர்பான விபத்துகளுக்கு, 'அதன் உற்பத்தியாளர், பராமரிப்பு நிறுவனம் மற்றும் கட்டட உரிமையாளர் ஆகியோரே பொறுப்பு' என, உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய அரசின் உயரிய உளவு அமைப்பான 'ரா' எனப்படும் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவின் தலைமையகம் டில்லியில் அமைந்துள்ளது. பல மாடி கட்டட அலுவலகமான இங்கு, 'லிப்ட்' வசதி உள்ளது.

'ஓடிஸ் எலிவேட்டர் கம்பெனி (இந்தியா) லிமிடெட்' நிறுவனம் வடிவமைத்த இந்த லிப்டை, ராணுவ பொறியியல் பிரிவு பராமரித்து வருகிறது.

கடந்த 2003ல், இந்த லிப்ட் இயங்கி கொண்டிருந்தபோதே பழுதடைந்தது. இரு தளங்களுக்கு நடுவே சிக்கிய லிப்டில், 'ரா' அமைப்பின் இயக்குநர் விபின் ஹண்டா உள்ளிட்டோர் மாட்டிக்கொண்டனர்.

மேல்முறையீடு

அவர்களை மீட்கும் போது, திடீரென லிப்ட் மீண்டும் இயங்கியதில் அதில் சிக்கி விபின் ஹண்டா உயிரிழந்தார்.

இது தொடர்பான வழக்கை விசாரித்த தேசிய நுகர்வோர் குறை தீர்ப்பாயம், 'இந்த விபத்துக்கு ரா அமைப்பு, ஓடிஸ் நிறுவனம் மற்றும் ராணுவ பொறியியல் பிரிவு மூன்றும் பொறுப்பு.

'மூவரும் இணைந்து, இறந்த விபின் ஹண்டாவின் குடும்பத்துக்கு 3.01 கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்' என, 2014ல் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து ஓடிஸ் நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கு, நீதிபதிகள் பி.வி.நரசிம்மா, அலோக் ஆராதே ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

இந்த வழக்கில், மனித தவறால் விபத்து ஏற்பட்டது என, லிப்ட் உற்பத்தியாளர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், மின் அழுத்தத்தில் ஏற்பட்ட ஏற்ற இறக்கம் காரணமாக, லிப்ட் பழுதாகி விபத்து ஏற்பட்டது உறுதியாகிறது.

மின் அழுத்த பிரச்னை தீர்க்கப்படாமலும், எட்டு மாதங்களாக லிப்ட் பராமரிக்கப்படாமலும் இருந்தது தெரியவந்துள்ளது.

இதன் விளைவாகவே விபத்து நடந்து உயிர்ப்பலி ஏற்பட்டது. கட்டட உரிமையாளரை போலவே, பராமரிப்பு நிறுவனம் மற்றும் லிப்ட் உற்பத்தியாளருக்கும், லிப்டில் பயணிப்பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு உள்ளது.

இழப்பீடு

எனவே, இந்த விபத்திற்கு லிப்ட் தயாரித்த நிறுவனம், 70 சதவீதம் பொறுப்பேற்க வேண்டும். அதை பராமரித்த ராணுவ பொறியியல் பிரிவு, 25 சதவீதமும், 'ரா' அமைப்பு, 5 சதவீதமும் பொறுப்பேற்க வேண்டும்.

தேசிய நுகர்வோர் குறை தீர்ப்பாயம் அளித்த உத்தரவின்படி, உயிரிழந்த விபின் ஹண்டா குடும்பத்துக்கு, 3.01 கோடி ரூபாய் இழப்பீட்டை மூவரும் இணைந்து வழங்க வேண்டும்.

விபத்து நடந்த தேதியில் இருந்து, 9 சதவீத ஆண்டு வட்டியும், 90 நாட்களுக்குள் இழப்பீடு தொகை செலுத்தப்படாவிட்டால், 12 சதவீத வட்டியும் வழங்கப்பட வேண்டும்.

இந்த உத்தரவு முறையாக நிறைவேற்றப்படுவதை தேசிய நுகர்வோர் குறை தீர்ப்பாயம் உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

ரூ.10 லட்சம் நகைகளை திருடி சென்ற எலிகள்

துமகூரு, ஜூலை 31–
கர்நாடக மாநிலம், துமகூரு நகரில், 'விஸ்வாஸ் ஜுவல்லரி' என்ற நகைக் கடை உள்ளது. நேற்று முன்தினம் இரவு, கடை உரிமையாளர் விஸ்வாஸ் மற்றும் ஊழியர்கள், கடையை பூட்டி சென்றனர்.

வழக்கம் போல நேற்று காலை கடையை திறந்தனர். அப்போது, 10க்கும் மேற்பட்ட மோதிரங்கள், மூன்று செயின்கள் காணாமல் போயிருந்தன.

கடையின் ஷட்டர் சேதமாகவில்லை; பூட்டியபடியே இருந்தது; உள்ளே யாரும் நுழைந்ததற்கான அடையாளங்களும் தென்படவில்லை. நகைகள் எப்படி காணாமல் போயின என தெரியாமல் கடை உரிமையாளரும், ஊழியர்களும் குழப்பம் அடைந்தனர்.

அதன் பின், கடையின் கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை பார்த்தனர். அதில், எலி ஒன்று கடைக்குள் சுற்றி திரிவது பதிவாகி இருந்தது. நகைகள் இருந்த டிரேவுக்கு சென்ற எலி, அங்கிருந்த நகைகளை ஒவ்வொன்றாக வாயால் கவ்வி செல்லும் காட்சி பதிவாகியிருந்தது.

இதையடுத்து, எலி சென்ற வழியை ஆய்வு செய்த ஊழியர்கள், தோண்டி வைத்திருந்த வலையில் மோதிரங்கள், செயின்களை பதுக்கி வைத்திருப்பது தெரிந்து, அவற்றை மீட்டனர்.

அரசு பள்ளி மாணவர் சேர்க்கை அதிகரிப்பு

சென்னை, ஜூலை 31–
அரசு தொடக்கப் பள்ளிகளில், கடந்த ஆண்டை காட்டிலும், நடப்பாண்டு மாணவர் சேர்க்கை சற்று அதிகரித்துள்ளது.

தமிழக பள்ளி கல்வித் துறையின் கீழ், 37,553 அரசு பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில், 31,336 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இதற்கான மாணவர் சேர்க்கை, கடந்த மார்ச் 1ம் தேதி தொடங்கியது. நடப்பு கல்வியாண்டில், 5 லட்சம் மாணவர்களை சேர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில், அரசு தொடக்கப் பள்ளிகளில், கடந்த 28ம் தேதி நிலவரப்படி, 4 லட்சத்து, 23,955 மாணவ, மாணவியர் புதிதாக சேர்ந்துள்ளனர். ஒன்றாம் வகுப்பில், 2 லட்சத்து 94,209; மழலையர் வகுப்பில் 41,231 பேர்; இரண்டாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை, 88,515 பேர் சேர்ந்துள்ளனர்.

கடந்த கல்வி ஆண்டில், 4.13 லட்சம் பேர் மட்டுமே சேர்ந்திருந்த நிலையில், இந்த கல்வியாண்டில் சேர்க்கை அதிகரித்துள்ளது.

தேர்தல் கமிஷனர் நியமன விவகாரத்தில் பிரதமரை சந்தேகிப்பது தவறானது

சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு வாதம்

– டில்லி சிறப்பு நிருபர்–
'தலைமை தேர்தல் கமிஷனர் மற்றும் துணை தேர்தல் கமிஷனர்களை நியமிக்கும் குழுவில் பிரதமர் இடம் பெற்றதால், ஜனநாயகத்திற்கு விரோதமாக அவர் முடிவெடுப்பார் என சந்தேகிப்பது தவறானது. எனவே, இந்த வழக்கை ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வுக்கு மாற்ற வேண்டும்' என, உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தரப்பில் முறையிடப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு, கடந்த 2023ல் வழங்கிய தீர்ப்பில், 'பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அடங்கிய குழுவே, தேர்தல் கமிஷனர்களை தேர்வு செய்ய வேண்டும்' என கூறியிருந்தது.

ஆனால், மத்திய அரசு பார்லி.,யில் இயற்றிய சட்டத்தில், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி விலக்கப்பட்டார். அவருக்கு பதிலாக, பிரதமரால் பரிந்துரைக்கப்படும் அமைச்சர் அக்குழுவின் உறுப்பினராக செயல்படுவார் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டது.

இதனால், தேர்வு குழுவில் மத்திய அரசின் கை ஓங்கும் என கூறி, இச்சட்டத்தின் அரசியலமைப்பு செல்லுபடியை எதிர்த்து, காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜெயா தாக்கூர் மற்றும் ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இம்மனுக்கள் நீதிபதிகள் தீபங்கர் தத்தா, சதீஷ் சந்திர சர்மா அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மத்திய அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா முன் வைத்த வாதம்:

தேர்வுக் குழுவில் பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர் இடம் பெற்றதால், மத்திய அரசுக்கே பெரும்பான்மை பலம் உள்ளது என்பதை காரணம் காட்டி, அவர்கள் ஜனநாயகத்திற்கு விரோதமாக செயல்படுவர் என சந்தேகிப்பது தவறானது. பிரதமர் பதவிக்கு என ஒரு புனிதத்தன்மை இருக்கிறது.

நீதிபதிகளை நீதிபதிகளே நியமிக்கும்போது வராத சந்தேகம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு நியமிக்கும்போது வருவது ஏன்?

மேலும், பிரதமரின் முடிவை நம்ப முடியாது என்றால், அவர் அமைச்சரவை உறுப்பினர்களை தேர்வு செய்யும்போதும், முன்னாள் நீதிபதி அல்லது வெளியாட்களின் ஆலோசனையை பெற வேண்டுமா?

இந்த விவகாரத்தில் அரசியலமைப்பு சட்ட விளக்கம் தேவைப்படுகிறது. எனவே, இவ்வழக்கை ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வுக்கு மாற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் வாதிட்டார். இதற்கு நீதிபதிகள், 'பிரதமர் மீது எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. அதே சமயம், தேர்தல் கமிஷன் சுதந்திரமாக செயல்படும் அமைப்பாக இருக்க வேண்டும்.

தேர்தல் கமிஷனரை நியமிக்கும் தேர்வு குழு நடுநிலையுடன் இருக்கிறது என்பதை வெளிப்படையாக காட்ட வேண்டாமா? அதற்கான சூழலை இந்த சட்டம் உருவாக்குமா?,' என, கேள்வி எழுப்பினர்.

மேலும், அமைச்சர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மீதுள்ள குற்றவழக்குகளின் எண்ணிக்கையை சுட்டிக்காட்டிய நீதிபதிகள், 'இந்தியாவில் ஜனநாயகம் தோற்றுவிட்டது' என டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் கூறியதையும் நினைவு கூர்ந்தனர்.

இதைத் தொடர்ந்து இவ்வழக்கை ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வுக்கு மாற்றுவது குறித்த தீர்ப்பை ஒத்திவைத்தனர்.

பா.ஜ.,வை விட த.வெ.க., அரசு அதிகம் மிரளுகிறது

'நீட்' தேர்வுக்கு எதிராக, மாணவர் அமைப்பின் இரு சக்கர வாகன பிரசாரத்திற்கு, கடைசி நிமிடத்தில், த.வெ.க., அரசு அனுமதி மறுத்துள்ளது. யாருடைய அழுத்தத்திற்கு பணிந்து இதை செய்கின்றனர் என்பது தெரியவில்லை. கடந்த காலங்களில், அமைதியான முறையில், அறவழியில் கண்ணியத்தோடு, மாணவர்கள் நடத்திய போராட்டங்களை கட்டுப்பாட்டுடன், அப்போதைய தி.மு.க., அரசு அணுகியது. தற்போது, பிரசார பயணத்தை தடை செய்தது, வன்மையான கண்டனத்துக்குரியது. 'நீட்' எதிர்ப்பு போராட்டத்தை கண்டு, பா.ஜ., அரசை விட, த.வெ.க., அரசு தான் அதிகம் மிரளுகிறது. சிவப்பும், மஞ்சளும் சேர்ந்தால் கிடைப்பது காவி என்பது இதன் வாயிலாக உறுதியாகி விட்டது. அடக்குமுறை அரசியலை கைவிட்டு, மாணவர்களின் பிரசார பயணத்திற்கு, த.வெ.க., அரசு, அனுமதி வழங்க வேண்டும்.

– ஸ்டாலின்,
தி.மு.க., தலைவர்

பொறியாளர்களுக்கு பொதுப்பணி துறையில் பதவி உயர்வு

சென்னை, ஜூலை 31–
பொதுப்பணி துறையில் பொறியாளர் பணியிடங்கள் காலியாக இருப்பதால், பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாக, நம் நாளிதழில் செய்தி வெளியாகி இருந்தது. இதையடுத்து, அவற்றை நிரப்ப, துறை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுகுறித்து, துறை செயலர் செல்வராஜ் வெளியிட்டுள்ள அரசாணை:

பொதுப்பணித் துறையில் உள்ள தலைமை பொறியாளர்கள் காலிப் பணியிடங்களில், கண்காணிப்பு பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கி நிரப்பப்படுகிறது. அதன்படி, எஸ்.ராஜ்குமார், எம்.ஸ்ரீதரன், கே.சரவணன், அ.அருள், எஸ்.முத்தமிழ் அரசு ஆகிய கண்காணிப்பு பொறியாளர்கள், தற்காலிகமாக தலைமை பொறியாளர்களாக பதவி உயர்த்தப்படுகின்றனர்.

தற்போது தற்காலிக பதவி உயர்வு பெற்றவர்கள், தலைமை பொறியாளர்களாக முழு தகுதி உடையவர்கள் என்பதால், அதற்குரிய சம்பள உயர்வும் வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பிரியங்காவுக்கு துணைவேந்தர்கள் கண்டனம்

புதுடில்லி, ஜூலை 31–
சென்னை ஐ.ஐ.டி., இயக்குநர் காமகோடியை, லோக்சபாவில், 'கோமிய நிபுணர்' என காங்கிரஸ் எம்.பி., பிரியங்கா குறிப்பிட்டதற்கு நாடு முழுதும், 215க்கும் மேற்பட்ட துணைவேந்தர்கள், முன்னாள் துணைவேந்தர்கள் மற்றும் கல்வியாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

லோக்சபாவில் தேர்வு சீர்திருத்தங்களுக்கான, பொது தேர்வு வினாத்தாள் மசோதா தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் நடந்தது.

கிண்டல்

அதில் பேசிய காங்கிரஸ் எம்.பி., பிரியங்கா, தேர்வு சீரமைப்புக்காக அமைக்கப்பட்ட உயர் பணிக்குழுவில் உறுப்பினராக உள்ள சென்னை ஐ.ஐ.டி., இயக்குநர் காமகோடியை, 'கோமிய நிபுணர்' என, கிண்டலாக குறிப்பிட்டார்.

இதற்கு கண்டனம் தெரிவித்து துணை வேந்தர்கள் உட்பட, 215க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள் இணைந்து திறந்த கடிதம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

பிரியங்கா

அதில் கூறியிருப்பதாவது:

கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பார்லிமென்டில் அவற்றை கண்ணியத்துடனும், ஆதாரங்களுடனும் விவாதிக்க வேண்டும். ஒருவரின் கருத்தை விமர்சிக்கலாம். ஆனால், அவரை இழிவுபடுத்தும் வகையில் விமர்சிப்பது கல்வி உலகின் மாண்பை பாதிக்கும்.

சென்னை ஐ.ஐ.டி., இயக்குநர் காமகோடி, கணினி அறிவியல் துறையில் முதுநிலை மற்றும் முனைவர் பட்டம் பெற்றவர். 150க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளதுடன், 50க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி திட்டங்களை வழிநடத்தி உள்ளார்.

உரிமை

நாட்டின் முதல் தொழில்துறை தரத்திலான நுண்செயலியை உருவாக்கும் பணியிலும் பங்களித்துள்ளார்.

எந்த கல்வியாளருக்கும் புதிய கருத்துகளை முன்வைக்கவும், பாரம்பரிய அறிவு குறித்த ஆய்வுகளில் பங்கேற்கவும் உரிமை உள்ளது.

ஒரு கருத்தை ஆதாரங்களின் அடிப்படையில் எதிர்க்க வேண்டும்; அதற்கு பதிலாக கேலியும், இழிவான அடையாளங்களும் பயன்படுத்துவது அறிவியல் மனப்பான்மைக்கு ஏற்றதல்ல.

ஜனநாயகத்தில் கருத்து வேறுபாடு அவசியமானது. ஆனால், விவாதத்துக்கு மாற்றாக கேலி இருக்க முடியாது.

இவ்வாறு அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காவலர் குடும்பத்தினருக்கு ரூ.5 கோடி விபத்து காப்பீடு

சென்னை, ஜூலை 31–
சாலை விபத்தில் உயிரிழந்த, காவலர்கள் ஐந்து பேரின் குடும்பத்தினருக்கு, தலா 1 கோடி ரூபாய், விபத்து காப்பீட்டு தொகையாக, டி.ஜி.பி., மகேஷ்குமார் அகர்வால் வழங்கினார்.

தமிழக காவல் துறையில் பணிபுரியும் காவலர்களுக்கு, எஸ்.பி.ஐ., வங்கி வாயிலாக, சம்பள தொகை வழங்கப்படுகிறது. இதில், விபத்து காப்பீடு திட்டமும் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக, சாலை விபத்துகளில் உயிரிழந்த காவலர்கள், ஐந்து பேரின் குடும்பத்தினருக்கு, எஸ்.பி.ஐ., வங்கி வாயிலாக, தலா 1 கோடி ரூபாய் வீதம் 5 கோடி ரூபாய்க்கான காசோலையை, டி.ஜி.பி., அலுவலகத்தில் நேற்று நடந்த நிகழ்ச்சியில், டி.ஜி.பி., மகேஷ்குமார் அகர்வால் வழங்கினார்.

India's Russian nuclear plant cost spikes 55%

RAJESH KUMAR SINGH
July 30

THE COST OF adding four Russian-designed nuclear reactors at the Kudankulam plant in Tamil Nadu has surged by more than half after the war in Ukraine pushed back construction by almost three years.

The four reactors of 1 gigawatt each are now estimated to cost ₹1.38 lakh crore ($14.4 billion), according to a written reply to parliament by Atomic Energy Minister Jitendra Singh on Wednesday. That is 55% more than the estimates published in 2024.

Steep cost escalations and holdups are symptomatic of the challenges faced by the sector. Similar projects from the US and the UK to Bangladesh have also suffered due to a sharp increase in expenditure after construction delays. Georgia's Vogtle plant, the first nuclear project built in the US in decades, was delivered years behind schedule at more than double its original budget.

The projected expenditure for two of the new Kudankulam reactors has risen by 73% while the estimate for the remaining increased by 40%, government data showed. The cost overruns will make electricity generated by these plants more expensive, posing hurdles for nuclear expansion in India's price-sensitive power market.

"While nuclear is important for climate risk mitigation and energy security, costs need to be contained," said Rupesh Sankhe, senior vice president for research at Elara Capital India, adding that this may dent the plant's competitiveness compared to other sources of power. "Very high costs only enforce the anti-nuclear argument and can create further opposition to projects."

India has installed two Russian reactors of 1-gigawatt capacity each at Kudankulam, a coastal town near the southern most tip of the country, and construction is ongoing for four more. The new reactors will be commissioned through March 2030, with the first expected to start operations in June next year, according to Singh. The government had earlier said that all these reactors will be completed by 2027.

The costs for building four 700-megawatt domestic reactors, two each at Kaiga in Karnataka and Gorakhpur in Haryana, are also set to be revised, Singh said on Wednesday.

India currently has 8.8 gigawatts of nuclear power capacity which contributes to about 3% of the country's power output. Last year, the government opened up the sector to private firms, pursuing an ambitious goal of expanding the country's nuclear generation capacity eleven-fold by 2047.

–BLOOMBERG

SLOW PROGRESS

- The four reactors in Tamil Nadu are now estimated to cost **₹1.38 lakh cr**
- The projected spend for two reactors has risen by 73% while it has spiked 40% for the others
- The cost overruns will make power generated by these plants expensive, posing hurdles for expansion

RESERVOIR LEVELS IMPROVE BUT STILL 34% BELOW 2025 LEVEL

RESERVOIR STORAGE ACROSS the country improved for the fourth straight week to 44.39% of the capacity on Thursday, up from 38.37% reported a week ago, thanks to adequate monsoon rains in July. However, the overall water storage across all 166 major reservoirs was over 34% below the level from a year ago and 7% below the normal or 10-year average level. Forty-five dams (27%) have more water than last year. — **Sandip Das**



Govt for enhanced China mkt access

INDIAN AMBASSADOR TO China Vikram Doraiswami on Thursday met Yan Dong, Vice Minister and Member of the Communist Party of China Leadership Group of the Ministry of Commerce, and called for enhanced market access for Indian products.

"They exchanged views on enhancing bilateral trade and economic ties, including the need for sustainable trade, and enhanced market access for Indian products like pharmaceuticals," the Indian Embassy said in a post on X.

"Towards this end, the two sides agreed to enhance mutual cooperation and communication," it said.

The meeting took place in the immediate backdrop of Foreign Secretary Vikram Misri's two-day visit to Beijing early this week during which he held talks with several Chinese officials to step up India-China engagement.

Since he took over the post in May, Doraiswami has been pitching for greater pharma exports and Chinese Investment to deepen ties. — PTI

Tighter quality norms for drug exports

MANU KAUSHIK
New Delhi, July 30

INDIA HAS OVERHAULED drug export rules, mandating that unapproved medicines will no longer be shipped unless cleared by importing nations or top global regulators. The move aims to maintain the country's standing as a reliable supplier of quality medicines globally.

"As a country, India has a strong commitment, and we are working together to strengthen this most important part of the value chain – the drug regulatory system – to further the global healthcare supply chain," Drugs Controller General of India (DCGI) Rajeev Raghuvanshi said on Thursday.

Under the revised rules, products not approved in India can only be exported if the importing country has explicitly approved them. Recognising that some smaller nations lack robust regulatory authorities, CDSCO developed an alternate pathway: the drug must be approved either by India or by one of six stringent regulatory authorities (SRAs) in regions like the US, the UK, Canada, Europe, Australia, or Japan.

PARLIAMENT QUESTIONS

Vande Mataram granted same status as Jana Gana Mana

PARLIAMENT ON THURSDAY passed a Bill that makes any insult to the national song Vande Mataram a punishable offence with Lok Sabha clearing the legislation amid din, a day when the House also saw frequent disruptions due to unrelenting protests and sloganeering by the opposition over various issues. The Bill was approved by the Rajya Sabha on Wednesday.

Over-speeding caused 82,124 road accidents in 2025

OVER-SPEEDING CAUSED 82,124 road accidents in India in 2025, accounting for around 16% of all road accidents, Parliament was informed on Thursday. Over-speeding caused 82,124 road accidents in India in 2025, accounting for around 16% of all road accidents.

E20 can reduce fuel economy by 2-6%, says Gadkari

PETROL BLENDED WITH 20 per cent ethanol (E20) can reduce fuel economy by 2-6% depending on the vehicle category and vintage, Road Transport and Highways Minister Nitin Gadkari stated in written reply to the Lok Sabha on Thursday.

— PTI

SK FINANCE LIMITED

Registered Office: G 1-2, New Market, Khasa Kothi, Jaipur, Rajasthan - 302001
E-mail: info@skfin.in || Phone : 0141-4161300
CIN: U65923RJ1994PLC009051

Extract of unaudited financial results for the quarter ended June 30, 2026
[Regulation 52 (8), read with Regulation 52 (4) of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("LODR Regulations")]

(₹ in lakhs except otherwise stated)

S. No.	Particulars	Quarter ended June 30, 2026 (Unaudited)	Quarter ended June 30, 2025 (Unaudited)	Year ended March 31, 2026 (Audited)
1	Total Income from Operations	73,667.04	65,172.50	2,82,360.06
2	Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/ or Extraordinary items)	13,864.17	11,517.02	56,724.98
3	Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and/ or Extraordinary items)	13,864.17	11,517.02	56,724.98
4	Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/ or Extraordinary items)	10,427.08	8,759.41	43,088.62
5	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	9,367.42	8,411.75	44,667.55
6	Paid up Equity Share Capital	1,344.99	1,340.54	1,344.83
7	Reserves (excluding Revaluation Reserve)	4,06,489.56	3,57,991.24	3,96,843.72
8	Securities Premium Account	2,12,686.61	2,10,886.90	2,12,716.24
9	Net Worth	4,06,427.73	3,58,499.71	3,96,282.87
10	Paid up Debt Capital / Outstanding Debt	12,90,150.05	11,94,853.90	12,81,974.28
11	Outstanding Redeemable Preference Shares	Not Applicable	Not Applicable	Not Applicable
12	Debt Equity Ratio	3.17	3.33	3.23
13	Earnings Per Share (of ₹ 1 each) (for continuing and discontinued operations) #			
	1. Basic	7.75	6.54	32.08
	2. Diluted	7.70	6.48	31.80
14	Capital Redemption Reserve	Not Applicable	Not Applicable	Not Applicable
15	Debenture Redemption Reserve	Not Applicable	Not Applicable	Not Applicable
16	Debt Service Coverage Ratio	Not Applicable	Not Applicable	Not Applicable
17	Interest Service Coverage Ratio	Not Applicable	Not Applicable	Not Applicable

Earnings per share for the interim periods is not annualized.

Notes:

(a) The above is an extract of the detailed unaudited quarterly financial results filed with Stock Exchange under Regulation 52 of the LODR Regulations. The full format of the unaudited quarterly financial results is available on the websites of BSE Ltd. (www.bseindia.com) and the website of the Company (www.skfin.in).

(b) For the other line items referred in regulation 52(4) of the LODR Regulations, the pertinent disclosures have been made to the BSE Ltd. and can be accessed on www.bseindia.com.

(c) There is no impact on net profit / loss, total comprehensive income or any other relevant financial item(s) due to change(s) in accounting policies for the period ended June 30, 2026.

(d) The previous period's / year's figures have been regrouped / reclassified, wherever necessary, to correspond with the current period's / year's classification / disclosure.

For and on behalf of the Board of Directors

Sd/-
Rajendra Kumar Setia
Managing Director & CEO
DIN- 00957374

Place : Jaipur
Date : July 29, 2026

1800 1039 039 | www.skfin.in

HYUNDAI

Hyundai Motor India Limited

Corporate Identity Number (CIN): L29309TN1996PLC035377
Regd. Office: Plot No. H-1, SIPCOT Industrial Park, Irrungattukottai, Sriperumbudur Taluk, Kancheepuram District, Tamil Nadu-602117, India.
Tel: +91(44) 47100000 E-mail: complianceofficer@hmil.net
Website: www.hyundai.com/in/en

NOTICE OF THE THIRTIETH ANNUAL GENERAL MEETING

NOTICE is hereby given that the **30th Annual General Meeting** ("AGM") of the Members of Hyundai Motor India Limited ("Company/HMIL") will be held on Wednesday, August 26, 2026, at 02.00 P.M., Indian Standard Time (IST), through Video Conferencing ("VC") to transact the businesses that will be set forth in the notice of 30th AGM.

The Ministry of Corporate Affairs ("MCA") vide its General Circular nos. 14/2020 dated April 8, 2020, 17/2020 dated April 13, 2020, 20/2020 dated May 5, 2020, 09/2024 dated September 19, 2024, and subsequent Circulars issued in this regard, latest being General Circular no. 03/2025 dated September 22, 2025 ("MCA Circulars") has permitted the holding of AGM through VC/OAVM. In compliance with the MCA Circulars and the relevant provisions of the Companies Act, 2013 ("Act"), the 30th AGM of the Company will be held through VC, without the physical presence of the members at a common venue. Members can join **and participate in the 30th AGM through VC facility only.**

In accordance with the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations 2015 ("SEBI Listing Regulations") and MCA Circulars the Notice and Annual Report ("Annual Report") for the financial year 2025-26 will be sent, in due course, through electronic mode to those members whose email addresses are registered with the Company/its registrar and share transfer agent i.e., KFin Technologies Limited ("RTA" or "KFin") or with respective Depository Participants ("DPs"). Notice and Annual Report for the financial year 2025-26 will also be made available on the Company's website at https://www.hyundai.com/in/en/investor-relations/financial-information/annual-report, on the website of the Stock Exchanges where the equity shares of the Company are listed, i.e., National Stock Exchange of India Limited at www.nseindia.com and BSE Limited at www.bseindia.com and on the website of NSDL at www.evoting.nsdl.com. In compliance with Regulation 36(1)(b) of the SEBI Listing Regulations a letter providing the web link including the exact path for accessing the Notice and Annual Report will also be sent to those members who have not registered their email addresses with Company/RTA or DPs.

In case any member is desirous of obtaining physical copy of Annual Report for the financial year 2025-26, he/she may send a request to the Company by writing at complianceofficer@hmil.net mentioning their Folio No./DP ID and Client ID.

The instructions for joining and manner of participation in the 30th AGM will be provided in the Notice. Members attending the 30th AGM through VC shall be counted for the purpose of reckoning the quorum under section 103 of the Act.

Manner of casting vote(s) through electronic mode

The Company is providing remote electronic voting facility ("Remote E-voting") to its members to cast their votes on all the resolutions as would be set out in the Notice. Further, the Company will also provide the facility of electronic voting during the 30th AGM ("E-voting"). Detailed procedure which is required to be followed by the members including members who are holding shares in physical form or who have not registered their email addresses for remote E-voting and E-voting, will be provided in the Notice. Members have an option to cast their vote on any of the resolutions using remote E-voting facility either during the E-voting period or during the **AGM.**

Final Dividend and Record date

The Board of Directors at its meeting held on May 08, 2026, subject to approval of the shareholders, has recommended a final dividend of ₹ 21 (i.e., 210% of face value) per equity share for the financial year ended March 31, 2026. The record date for the purpose of final dividend is Wednesday, **August 05, 2026.** The final dividend, once approved by the members at the 30th AGM, will be paid subject to deduction of tax at source, within thirty (30) days through electronic or other permissible mode. To avoid delay in receiving final dividend, members are requested to update their KYC with their DPs (where shares are held in dematerialized mode) and with the RTA of the Company (where shares are held in physical mode) to receive final dividend directly into their Bank Account on the payout date.

Manner of registering/updating email address, Bank account mandate and other KYC details

Dematerialized Holding	Register/update the details in the demat account, as per the process advised by your DP
Physical Holding	Register/update the details in the prescribed form ISR - 1 along with other relevant forms and supporting documents with RTA of the Company at their office at Kfin Technologies Limited, Unit: Hyundai Motor India Limited, Selenium Tower B, Plot 31-32, Gachibowli, Financial District, Nanakramguda, Hyderabad - 500032 or by email at einward.ris@kfintech.com. Member may download the prescribed form from the RTA website at https://ris.kfintech.com/clientservices/isc/isrforms.aspx.

Members may note that SEBI has mandated that members holding shares in physical mode, whose folio(s) do not have KYC details updated, shall be eligible for any payment including dividend, interest or redemption in respect of such folios, only through electronic mode, w.e.f. April 1, 2024.

In accordance with the MCA Circulars, members can also temporarily update their email address and mobile number with RTA by accessing the link https://ris.kfintech.com/clientservices/isc/isrforms.aspx for limited purpose of receiving members communications, including the Notice and Annual Report for financial year 2025-26. The members are requested to register/update their email address promptly to receive all relevant communications issued by the Company.

In case of any query with respect to the aforesaid process, Members are requested to write to einward.ris@kfintech.com or call at the toll-free number 1800 3094001.

This public notice is being issued for the information and benefits of all the members of the Company in compliance with MCA and SEBI Circulars.

For Hyundai Motor India Limited
Sd/-
Pradeep Chugh
Company Secretary & Compliance officer
M. No: A18711

Date: July 31, 2026
Place: Gurugram